# பாலைக் கலி – இயற்கை வருணனை

*திரு. மு. கார்த்திக்*
தமிழாசிரியர், சென்னைக் கிறித்துவக் கல்லூரி மேல்நிலைப் பள்ளி
சேத்துப்பட்டு, சென்னை
https://doi.org/10.5281/zenodo.15526478

## முன்னுரை

*சங்க காலத்து இலக்கியங்களுள் கலித் தொகையும் ஒன்று. சங்க நூல்கள் எனப்படுகின்ற எட்டுத்தொகை நூல்களில், கலித்தொகை ஆறாவது நூல். இந்நூல் அகப்பொருள் சார்ந்த நூல். தொகை நூலில் தொகை எனக் குறிக்கும் பெயர்கள் மூன்று நூல்கள் அமைந்துள்ளன. அவை குறுந்தொகை, நெடுந்தொகை (அகநானூறு), கலித்தொகை எனவும் பாவின் பெயரைப் பெற்ற நூல்கள் பரிபாடலும் கலித்தொகையுமாகும். இதனை தொல்காப்பியனார் அகத்திணையாகிய அகப்பொருட் செய்திகளைப் பாடுவதற்கு உரிய தகுதி வாய்ந்த பாவாகக் கலிப்பாவினையும் பரிபாட்டினையும் குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பியர் அகத்திணை இயல் (ப-53) சுட்டி காட்டியுள்ளார்.*

*கடவுள் வாழ்த்தைப் பாடியவர் நல்லந்துவனார். கலித்தொகையில் கடவுள் வாழ்த்துச் செய்யுளோடு நூற்றைம்பது பாடல்களைக் கொண்டு விளங்குகின்றன. இதனை தொகுத்தவர் நல்லந்துவனார். தொகுப்பித்தவர் யாரென்று அறியப்படவில்லை. இந்நூற்றைம்பது பாடல்களும் ஐந்து திணைகளாக பிரிக்கப்பட்டுப் பாலைக்கலி, குறிஞ்சிகலி, மருதக்கலி, முல்லைக்கலி, நெய்தற்கலி என வழங்கப்படும். இப்பாடல் பாடுபவர்கள் முறையே பெருங்கடுங்கோ, கபிலர், மருதனிளநாகனார், நல்லுருத்திரன், நல்லந்துவனார் என்றும் ஐவர் பாடிய வெண்பா பின்வருமாறு:-*

***“பெருங்கடுக்கோன் பாலை, கபிலன் குறிஞ்சி***
***மருதனிள நாகன் மருதம் - அருஞ்சேழன்***
***நல்லுருத்திரன் முல்லை நல்லந் துவனெய்தல்***
***கல்விவலார் கண்ட கலி.”***

*எனப் இப்பாடல் வாயிலாக அறியமுடிகிறது. மேலும் கலிப்பாவின் உறுப்புகளாகிய தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச் சொல், சுரிதகம் எனும் ஆறு உறுப்புகள் ஆகும். கலித்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ள இயற்கை வருணைகள் (காட்சிகள்) பற்றி முறையினை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

## கன்னித்தமிழ் (கலித்தொகை)

*“கலித்தொகை” என்னும் “கன்னித்தமிழ்b நூல் இன்பச் சுவையை முதன்மையாகக் கொண்ட நூல்; இயற்கை காட்சியை படம் பிடித்து காட்டும் நூல்; பண்டைய புதின நூல்; காதல் வாழ்க்கைக் கதையை நிகழ்ச்சியாக கூறும் நூல்; பண்டைத் தமிழர் போற்றிய காதல் வாழ்க்கை பற்றி பல்வேறு நிகழ்ச்சி களைப் பாடல் வடிவில் படம் பிடித்துக் காட்டுவது கன்னித்தமிழ் நூல்.*

*கலித்தொகையை “கலி” எனவும், “கலிப்பா” எனவும், “கலிப்பாட்டு” எனவும், “நூற்றைம்பது கலி” எனவும் பண்டைய உரையாசிரியர்களால் உரைக்கப்படுகின்றன. அகத்தையும் புறத்தையும் ஒருங்கே பெற்று பல புலவர்கள் பல சமயங்களிற் செய்த செய்யுள்களின் தொகுப்பன்று இந்நூல். பாவகையில் பெயர் பெற்ற கலித்தொகை கற்றறிந்தார் ஏத்தும் கலி என்றும் “கல்விவலார்*

கண்ட கலி' எனவும் சிறப்பித்துக் கூறப்படுகிறது.

இந்நூலில் உள்ள 149 கதை நிகழ்ச்சிகளுள், மிகவும் சுவையான 19 நிகழ்ச்சிகளை மட்டும் தன்னுள் கொண்டதாக இந்நூல் அமைய பெற்றுள்ளது. இவற்றுள் ஒவ்வொரு கதை நிகழ்ச்சியும், ஒவ்வொரு வகையான சுவை உடையது; படிக்கத் தூண்டும் விறுவிறுப்பு நடை உடையது.

இலங்கைத் தமிழ் அறிஞர் திரு.சி. வைதோமோதரம் பிள்ளை அவர்கள் முதன் முதலாகக் கி.பி. 1887 யில் பதிப்பித்த கலித்தொகையை "நல்லந்துவனார் கலித்தொகை" என்று குறிப்பிடப்பட்டுள்ளார். நெய்தற் பகுதியின் ஆசிரியராகக் குறிக்கப்பட்ட நல்லந்துவனாரே ஏனைய பகுதிகளுக்கும் ஆசிரியராய் இருந்திருக்க கூடும் என பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்களுடைய கூற்று என அறியமுடிகிறது.

புலியூர்க் கேசிகன் அவர்கள் எழுதிய கலித்தொகை தெளிவுரையில் எல்லாச் செய்யுள்களும், அக்காலத்து மக்களின் வாழ்வியலை ஓவியப் படுத்திக் காட்டுவதன் மூலம், பிற்காலத்தார் அறிந்து மகிழவும், புரிந்து மேற்கொள்ளவும், கருணையோடு செய்யப்பெற்ற உயிரோவியங்காகவே உள்ள எனவும், புலவர்கள் யாவும் தான் வாழ்ந்த காலத்தில் இயற்கையை ஓவியமாகவும், மக்களின் வாழ்வியலை உயிரோவியமாகக் கலிப்பாட்டில் செய்யுளின் வாயிலாக அன்பையும் அறத்தையும் அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்த பழந்தமிழரின் நல்லற வாழ்க்கையை கலியில் கவினுறக் காணலாம்.

**இயற்கை வருணனை**

சுவைப்படச் சொல்ல வேண்டுமானால் கற்பனை மனம் வேண்டும். கற்பனை மனம் உள்ளவர்களுக்குப் பொருள்களை வருணிக்கும் ஆற்றல் தன்னால் வரும், இயற்கைக் காட்சிகளை வருணித்துள்ள அழகை கலித்தொகையில் காணலாம்.

மக்களின் இயல்பான வாழ்வியலை இலங்கச் செய்வனவே இக்கலியிலுள்ள செய்யுள்கள். அக்காலத்து ஐவேறு நிலத்தவர்களின் பல்வேறு வாழ்க்கை நிலைமைகளையும், சுவை குன்றாமல் அழகோடும் நயமாகவும் விளக்குகின்றன. இயல் பிறந்த கற்பனைகளாகப் பாடாமல், இயற்கையின் கண் தோன்றும் செவ்விகளையே அழகுறச் சொல்லோவியப் படுத்தி அமைத்துள்ளனர். அவ்வழகுகள் சொல்லோவியத் திறத்தால் அவை தாமும், மேலும் அழகு பெற்று நம்மையும் களிப்பூட்டுகின்றன. என்று கலிப்பாட்டில் இயற்கை வருணைகளை மிகுதியாக இருக்கின்றனவாகவும் புலியூர்க் கேசிகன் எழுதிய தெளிவுரையில் அறிய முடிகின்றது.

பாலைக்கலியில் கொடுமை பெரிதும் காட்சிப் படுத்தப்பட்டாலும், அந்நிலத்தில் வறுமையை உள்ளத்தைத் உறைய வைக்கும் வண்ணம் பாலை பாடிய பெருங்கடுங்கோ,

> ***சீறு அருங் கணிச்சியோன் சினவலின் அவ் எயில்***
> ***ஏறு பெற்று உதிர்வன போல், வரை பிறந்து, இயங்குநர்***
> ***ஆறு கெட விளங்கிய அழல் அவர் ஆர் இடை***
>
> ***(1: 6-8)***

என்ற பாடலில் கணிச்சிப் படையுடைய கடவுள் சினம் கொண்டு முப்புரங்களையும் எரித்த சிவனின்முகம் போல ஞாயிறு தீப்பிழம்பாக்கிச் சுடுகின்றான். அழல்வீசும் அவ்வழியில் போவோர்க்கு வழியில் எல்லாம் வரையிணைந்து செல்லும் சுரம் ஆகும்.

தலைவன் செல்லும் வழி யாதும் நீர் வற்றிய சுனையும், வாடி வதங்கும் இலைகளோ இல்லாமல் கிளைகளும், அம்மரத்தில் படர்ந்து விரிந்த கொடியானது பற்றுப்போக, அழகிய தளிரும் வாடிக் கிடக்கவே என வறட்சியின் தன்மையை மிகுதிப்படுத்தி பாடுகிறார் பாலை பாடிய ஆசிரியர்.

**கடுங்கண் மறவர் வருணனை**

> ***அற்றம் பார்த்து அல்கும் கடுங்கண் மறவர் தாம்***
> ***கொள்ளும் பொருள் இலர் ஆயினும், வம்பலர்***
> ***துள்ளுநர்க் காண்மார் தொடர்ந்து, உயிர் வெளவலின்***
> ***புள்ளும் வழங்காப் புலம்பு கொள் ஆர் இடை***
>
> ***(3: 3-6)***

மேற்கண்ட பாடலில் பாலை நிலத்து

*மறவர் கட்டான உடல் வலிமை மிக்கவர் கருமை மிக்க சுருண்டு வளர்ந்த மயிரினர் உடையவர்; பிறர்பால் அச்சம் விளைவிக்க புலியின் பார்வை போன்று தோற்றம் உடையவராகவும், கையிலே வில்லேந்தி அவ்வழியில் வருபவரை கொள்ளை இட்டு, கொள்ளையிட கூடிய பொருட்கள் ஏதும் இல்லாமல் இருந்தால் அவர்களை நடுங்க செய்வதும், சற்றும் இரக்கம் இல்லாதவர்களாகவும், எதிர்ப்பட்டோர் யாராயினும் தொடர்ந்து சென்று கொல்வர் கடுங்கண் மறவர், அவ்வழியே பறவைகளும் பறப்பதற்கு நடுங்கி அச்சமுற்றது எனக் கூறிய புலவர் மறவர்களுடைய செயல்களைப் பற்றி காட்சிப்படுத்துள்ளார். மற்றொரு பாடலில் பின்வருமாறு;*

***பாஅல் அம் செவிப் பணைத் தாள் மா நிரை***
***மாஅல் யானையொடு மறவர் மயங்கித்***
***தூறு அதர்பட்ட ஆறு மயங்கு அருஞ் சுரம்***
***(4: 1-3)***

*என்று, கடந்து செல்லும் காட்டு வழி பாதையை கண்டுபிடித்து செல்வது அவ்வளவு எளிதல்ல அங்கு யானைகளும் மறவரும் அவ்வழியில் செல்வோருக்கு பெரும் துன்பத்தை விளைவிப்பர். மேலும், பெரிய காதும் பருத்த கால்களும் உடைய யானைக் கூட்டங்களும், தான் செய்யும் தொழில் தவறு என நினைக்காமல் அங்குள்ள மறவர். அதுவே, சரியென நினைக்கும் அருஞ்சுரம் வாயிலாக அறிய முடிகிறது. புலவர் அதே செய்யுளில்*

***ஓர் இரா வைகலுள், தாமரைப் பொய்கையுள்***
***நீர் நீத்த மலர் போல (4: 14-15)***

*அதாவது, பகல் முழுவதும் அழகாகத் தோன்றி காட்சியளிக்கும். ஒரு தாமரைக் குளத்தில் மறுநாள் அக்குளத்தில் நீரெல்லாம் வற்றிப் போக எவ்வாறு காட்சியளிக்குமோ அக்காட்சியை இயற்கை வருணையாக எடுத்துரைக்கிறார்.*

**முதுவேனிற் கால வருணனை**

*பாலைக்கலியில் முதுவேனிற்காலம் பற்றி பல இடங்களில் திறம்பட புனையப்பட்டுள்ளன. முதுவேனிற் காலத்தில் வெயில்கள் சுட்டெரிக்கும் காலம். பாலை நிலத்தில் புல் நுனியும் காணாதனவாயின் காட்டுப் பசுக்கள் யாவும் பசியால் மெலிந்தும், அங்குள்ள கள்ளிச் செடிகளைத் தின்னத் தொடங்குகின்றன. அதனை கவிஞர் பாடிய பாடல் வரிகள்:-*

***மரையா மரல் கவர, மாரி வறப்ப -***
***வரை ஓங்கு அருஞ் சுரத்து ஆர் இடைச் செல்வோர்,***
***சுரை அம்பு, மூழ்கச் சுருங்கி, புரையோர் தம்,***
***உள் நீர் வறப்பப் புலர் வாடும் நாவிற்கு***
***தண்ணி பெறாஅத் தடுமாற்று அருந்துயரம்***
***கண்ணி நனைக்கும் கடுமைய (5: 1-6)***

*இப்பாடல் அடிகளில் வறண்டு நிலத்தில் மழை பெய்யவில்லை நீர்நிலைகள் அனைத்தும் வற்றியும், அத்தகைய தன்மையுடைய காட்டு வழியில் உயரமான பாறைகளால் நிறைந்தும், அவ்வழிச் செல்வோரை வெப்பத்தால் உடல் மெலிந்தும் உண்ணும் நீரும் இல்லாமல் வாடித் துடிப்பர் ஆறலைகள்வர். அக்கள்வர்கள் தன் அம்பினால் கொல்கையில் அவர்களுடைய கண்களில் இருந்து திரண்டு வரும் நீர் துளிகளே உருண்டு வாயில் விழும்; அந்நீரானது, நாவினை நனைப்பதற்கு ஒரு சொட்டும் நீரில்லாமல் துடிப்பர் அப்படிப்பட்ட கடுமையான அருஞ்சுரம் என பாலைக் கலியில் வருணிக்கப்படுகின்றன. பாலை நிலத்தில் கானல் நீரை நீரோட்டம் என்று நினைத்து உடம்பு மெலிந்த யானைகள் தண்ணீரைத் தேடி ஓடுகின்றன. அதனை;*

**வேனில் உழந்த வறிது உயங்கு ஒய் களிறு**
**வான் நீங்கு வைப்பின் வழங்காத் தேர் நீர்க்கு அவாஅம்**
**கானம் கடத்திர், எனக் கேட்பின், யான் ஒன்று**
***(6: 1-3)***

*என மறவர்கள் வில் அம்பினைக் கொண்டு வழிபோக்கரின் உடல்களை இலை, சுள்ளிகள் மூலம் மூடி வைத்து யாரும் பார்க்காதபடி மறைப்பர், அப்படிப்பட்ட கொடுமைகள் நிறைந்த பாதை அது. அங்கு, நீருக்காக ஏங்கும் யானைகள் ஒவ்வொரு அனைகளையும் நீர் காணாதவாறு, ஒரு சுனையில் மட்டும் சிறிது தண்ணீரைப் பார்த்தவுடன் ஆவலோடு சென்று துகிக்கையால் நீரைத் தொட்டதும் நீரின் வெம்மையை தாங்க முடியாமல் துதிக்கையை தூக்கி திசையறியாமல் வேறுவேறு*

பக்கங்களாக பிரிந்து சென்றன. இதனை

***இடு முள் நெடு வேலி போல, கொலைவர்***
***கொடுமரம் தேய்த்தார் பதுக்கை நிரைத்த***
***கடு நவை ஆர் ஆற்று, அறுசுனை முற்றி,***
***உடங்கு நீர் வேட்ட உடம்பு உயங்கு யானை***
***கடுந் தாம் பதிபு, ஆங்குக் கை தெறப்பட்டு,***
***வெறி நிரை வேறாகச் சார்ச்சாரல் ஓடி,***
***நெறி மயக்குற்ற நிரம்பா நீடு அத்தம் (11: 1-7)***

என்ற பதினொன்றாம் பாலைக்கலிப் பாடலால் இடைச்சுரம் அறியலாம். பாலை நிலத்தில் காட்டுத் தீயினால் அங்கு இருக்கும் புதர்களும் மற்றவை எல்லாம் எரிந்து போயின. மான் கூட்டங்கள் திண்பதற்குத் தழைகள் ஏதும் இல்லை நீராவது அருந்த வேண்டும்.

***பொரி மலர்ந்தன்ன பொறிய மட மான்,***
***திரி மருப்பு ஏறொடு தேர் அறற்கு ஓட,***
***(12; 3-4)***

என்று, நினைத்த கடமான் கூட்டம் அது கானல் நீர் எனத் தெரியாமல் ஓடிக் கொண்டிருந்தது. அப்பாலைவனத்தில் கள்ளிச் செடிகள் வாடி சாய்ந்தும், மலைகளில் இருந்த செடி கொடிகள் அனைத்துமே கருகி விட்டன. மந்தி உயங்க என வருந்தியும் மெலிந்தும் காணப்படும் மந்திகள் மரங்களை நம்பியே வாழ்கின்றன. அந்நிலத்தில் மரங்கள் எல்லாம் கரிக்கட்டைகளாக காணப்படுகின்றன.

***உரல் போல் அடிய உடம்பு உயங்கு யானை யானது, (12 : 6)***

உடலும் உள்ளமும் சுருங்கிய யானைகள் சேற்றின் ஈரத்தை மட்டும் சுவைக்க போய்க் கொண்டிருக்கின்றன. அவை

***சேறு சுவைத்து, தம் செல் உயிர் தாங்கும்***
***(12 : 18)***

தன் உயிரைப் போகவிடாமல் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கும் யானைகள் கூட்டம். புலவர் தம் பாலைக் கலியில் நீரில் தன்மையை வெஞ்சுரம் வாயிலாக வருணிக்கப்படுகின்றது.

## இளவேனிற் கால வருணனை

இளவேனில் காலம் என்பது குளிர் காலத்திற்கும் கோடைக் காலத்திற்கும் இடையில் வரும் வசந்தகாலம் (இளவேனில் காலம்) என்று கூறுவர். பாலைக் கலியில் இயற்கை வருணனை செய்திப் பற்றி அழகாகவும், பல இடங்களில் நயம் படப் புனைக்கப்பட்டுள்ளன. புத்தம் புதிய மலர்கள் பூத்திருக்க அதனை வண்டுகள் சிறகடித்து தேன் உண்டு மகிழும் பருவம் இளவேனில்.

அவ்விளவேனில் காலம் வையை ஆற்றின் இரு கரையிலும் மரக்கிளைகள் தாழ்ந்தும், மலர் பூத்துக் குலுங்கும் அழகினையும், ஆற்றின் இடையில் தோன்றும் செம்மை நிற மணல்மேடுகள். தலையில் பூக்களை சூடி வருவது போன்று காட்சித்தருகின்றன கன்னியர்கள். ஆற்று நீர் அறல் மணலையாய் ஊற்றெடுத்து சென்று கொண்டிருக்க இவையே இளவேனில் காலம் என வருணனைத்து கூறுகிறார் புலவர்.

கார்மேகத்தின் அழகையும் அதனை ஒப்பிட்டு மகளிரின் கருத்த நிறம் உடைய கூந்தலை விளக்குகிறார். நீர் வடிந்து போன பின்னர்த் தோன்றிய களுமணல் கூந்தலை முடித்துப் பொன்னாலான நகைகள் சூடியவாறு போல வேங்கை பூக்கள் அதன் மேல் உதிர்ந்து கிடைக்கின்றன. மேலும் வேங்கை மரங்களிலே மலர்கள் பூத்துக் குலுங்கியும் இடையன் யாழி இசைப்பது போல வண்டு இனங்கள் புதர்களில் இசை பாடியும், மரக்கிளைகள் அசைந்தாடியும் தலைவனுக்குக் தூதாக வருணனைக்கப்பட்ட இளவேனிற் காட்சி.

பாலைக் கலியில் இறுதிப் பாடலான 34, 35 பாடலில், சோம்பல் இல்லாதவன் செல்வம் வளம் பெருகும் அதுபோல மரங்களுடைய பூக்கள் பூத்து குலுங்கின. அச்செல்வத்தைச் சோம்பேறிகள் களித்து திரிவது போல வண்டுகள் பூக்களின் இருந்த தேன் உண்டு கிளைகளை சுற்றிச் சுற்றி "ரீங்காரம்" விடுகின்றன. நீர் துறையில் நிறைந்தால் குளங்கள் மலர் சோலைகள்களாக விளங்கின. அத்துறையில் பூவிதழ்கள் உதிர்ந்து செல்வது போல தெளிந்த நீரும் ஓடிக்கொண்டிருந்தன. மற்றொரு பாடலில் வெண்கடப்ப மரங்களின் மேலிருந்து மயில்கள் அழகுடன் ஆடுகின்ற காட்சியும், மரங்களில் சுற்றி வண்டும் சுரும்பும் யாழிசை ஒலிப்பது போல அங்கே

*ஆரவாரம் செய்கின்றன. அம்மரத்தில் எங்கும் ஒலி எழுப்பியும் மலர்கள் வண்டினங்களை 'வருக வருக' என அழைப்பது கோல மரக்கிளைகள் அசைந்தாடுகின்றன. இதனை இளவேனிற் காலம் (அ) குழவி வேனில் என்று அழைக்கப்படுகின்றனர்.*

**முடிவுரை**

*சங்ககால மக்கள் இயற்கையோடு வாழ்ந்து வந்தனர் என்பதனை சங்க இலக்கிய பாடல்கள் மூலம் அறிய முடிகிறது. மனிதன் இயற்கையோடு பின்னிப்பிணைந்து தன் வாழ்வியலை உயிரோவியமாக வரையப்பட்ட நூல் கலித்தொகை. அக்கலித்தொகையில் பாலை நில வர்ணனை சிறப்பாக வர்ணித்து காட்டியுள்ளார் புலவர். பாலைக் கலியில் கடுங்கண் மறவர் எச்செயலை செய்கின்றனர். அவர்கள் வாழ்க்கை முறை இயற்கையாக வர்ணிக்கப்படுகிறது. மேலும் முதுவேனிற் காலத்தில் நீர் வற்றிய சுனையும், நீருக்காக அலைந்து திரியும் விலங்கினங்களும் மற்றும் கானல் நீர் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இளவேனிற்காலம் மலர்கள் பூத்துக்குலுங்கும் காட்சி அதனை வண்டுகள் தேன் உண்டு மயங்கும் நிலை, மரக்கிளை அசைவுகள் அதில் வருகின்ற ஒலிகள் ஆகியவற்றை அழகு மிகுந்த காட்சிகள் இடம் பெறுகின்றன. இவ்வாறு பாலைக்கலியில் இயற்கை வர்ணனை பற்றி இந்த ஆய்வின் மூலம் அறியலாம்.*

**துணை நூல் பட்டியல்**

1. *கலித்தொகை மூலமும் உரையும் - புலியூர்க் கேசிகன்*
2. *சங்க இலக்கியம் (ஓர் அறிமுகம்) - எம்.எஸ். ரவீந்திரன்*